# <u>தாம்பரம் பாதாள சாக்கடைத்திட்டம்</u>

- தாம்பரம் பாதாள சாக்கடை திட்டம் நான்கு சிப்பத்திற்கும், ரூ.160.97 கோடி மதிப்பீட்டிற்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சிப்பம் –1 இல் கிழக்கு தாம்பரத்துக்காக கழிவு நீர் சேகரிப்பு பணி
- சிப்பம் – 2 இல் மேற்கு தாம்பரத்துக்காக கழிவு நீர் சேகரிப்பு பணி
- சிப்பம் – 3 இல் கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரத்தில் உற்பத்தியாகும் 30 மில்லியன் லிட்டர் (நாள் ஒன்றுக்கு) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி
- சிப்பம் – 4 இல் கிழக்கு தாம்பரத்தில் சேகரிக்கும் கழிவுநீர் உந்து குழாய் மூலம் மேற்கு தாம்பரத்தில் அமைய உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணி.
- **பாதாள சாக்கடை திட்டம் கீழ்கண்ட முக்கிய பணிகளைக் கொண்டுள்ளது.**
    1. கழிவு நீர் சேகரிப்பு அமைப்பு – 168364 மீட்டர் நீளம்
    2. 12 இடங்களில் கழிவுநீர் அகற்றும் நிலையங்கள், 5 இடங்களில் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 13 இடங்களில் கூடுதலாக சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்கள் கட்டுமானப் பணிகள்.
    3. கழிவுநீர் உந்து குழாய் – 22627 மீட்டர் நீளம்
    4. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கொள்ளளவு – நாள் ஒன்றுக்கு 30 மில்லியன் லிட்டர்(எஸ்.பி.ஆர் தொழில் நுட்பம்).
- **ஒப்பந்தத்தின் விவரங்கள் :**

**சிப்பம் – 1** ற்கான ஒப்பந்த பணிகள் ரூ.4874.93 இலட்சத்திற்கு 24 மாதத்தில் பணி முடிக்க M/s.இ.சி.சி. கன்ஸ்டரக்ஷன் மற்றும் இன்டஸ்டிரீஸ் லிமிடெட், சென்னைக்கு 30.09.2009 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 11.12.2009 அன்று தொடங்கப்பட்டு, 10.12.2011 அன்று முடிக்க உத்தேசிக்கப்பட்டது, பணியில் தாமதம் ஏற்பட்டதால் ஒப்பந்தம் 30.06.2014 அன்று ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகள் தாம்பரம் மாநகராட்சியிடம் 06.08.2014 அன்று ஒப்படைக்கப்பட்டது.

**சிப்பம் – 2** ற்கான ஒப்பந்த பணிகள் ரூ.**5604.82** இலட்சத்திற்கு **24** மாதத்தில் பணி முடிக்க M/s.ஏ.பி.ஆர். ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட், ஹைதராபாத் அவர்களுக்கு **25.03.2010** அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி **19.05.2010** அன்று தொடங்கப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சிப்பம் – 3** ற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய ஒப்பந்த பணிகள் ரூ.**2156.99** இலட்சத்திற்கு **24** மாதத்தில் பணி முடிக்க M/s.சேகர் தீபக் கன்ஸ்டரக்ஷன் லிமிடெட், சென்னை அவர்களுக்கு **10.05.2012** அன்று கொடுக்கப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சிப்பம் – 4** ற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய ஒப்பந்த பணிகள் ரூ.**1827.45** இலட்சத்திற்கு **12** மாதத்தில் பணி முடிக்க M/s.விஷ்வா இன்ப்ராஸ்டரக்ஷர்ஸ் லிமிடெட், சென்னை அவர்களுக்கு **21.11.2011** அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி **23.05.2012** அன்று தொடங்கப்பட்டு, **23.11.2015** அன்று முடிக்கப்பட்டது.

➢ **பணிகளின் தற்போதைய நிலை :**

**சிப்பம் –1 :** ஒப்பந்தம் **30.06.2014** அன்று ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகள் தாம்பரம் மாநகராட்சியிடம் **06.08.2014** அன்று ஒப்படைக்கப்பட்டது.

**சிப்பம் – 2 :** தற்போது 93%. விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன.

**சிப்பம் – 3 :** தற்போது **93%.** விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன.

**சிப்பம் – 4 : 100** விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டது.

1. இது வரை இத்திட்டத்திற்கு ரூ.**11462.40** இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.
2. இப்பணிகள் அனைத்தும் ஜுன் **2022** இல் முடிக்கப்படும்.
3. இத்திட்டம் சுமார் **3.61** இலட்சம் மக்கள் பயன் படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது .